1982 பிப்ரவரி 19]

திரு. உ. சுப்பிரமணியன் : இந்தத் தொழிற்சாலை முதலில் இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. சாயலோடைக்கரை என்ற பகுதியில் நிலம் எல்லாம் பார்த்து முடிவு செய்யப்பட்டு பிறகு வடாற்காடு மாவட்டத்திற்கு எப்படி மாற்றப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையைத் போடுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் என்னிடம் இல்லை. நான் அப்படி அறிவித்ததாகவும் எனக்கு நினைவில்லை. நான் முன்னாலேயே இந்தத் தொழிற்சாலை பற்றி பேசியபோது வட ஆற்காடு மாவட்டத்தில் வரும் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்பின் பேரில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஒத்துழைப்பு என்றால் பைனான்ஷியல் ஒததுழைப்பா அல்லது டெக்னிக்கல் கொலாபரேஷனா? எப்படிப்பட்ட ஒத்துழைப்பு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : டெக்னிக்கல் ஒத்துழைப்புதான்.

அலிவலம், ஆண்டிவயல் கிராம ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் திட்டம்.

* வின எண் 279—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதி அலிவலம் மற்றும் ஆண்டிவயல் அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆம். தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் உள்ள அலிவலம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு ரூ. 60,000 மதிப்பீட்டுச் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. ஆண்டிவயல் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு ரூ 60,000 மதிப்பீட்டில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். ஆர். கோவேந்தன்: ஆண்டிவயல் அரிசன நலப் பள்ளி தொடர்ந்து மாதா கோவிலில் நடந்துவருகிறது. நீண்ட நாட்களாக அப்படியிருப்பதால், மாதா கோவிலில் ஏதாவது நடக்கிற காலத்தில் லீவ் விட்டுவிடுகிறார்கள். ஆகவே அந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்று உடனடியாக ஒரு கட்டிடம் கட்டு வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஆண்டிவயல் பொறுத்த வரையில் சென்ற ஆண்டே அதற்கான ஒரு கட்டடம் கட்டப் படும் ஒரு சூழ்நிலை இருந்தது. இருந்தாலும், இந்தப் பகுதி கடற்கரைக்கு அருகாமையில் அமைந்திருக்கிற காரணத்தால் அங்கே ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு கூரை வேயப்படுமானால் அங்கிருக்கக்கூடிய காற்றின் காரணமாக அந்தக் கட்டடம் பழுதடையக் கூடிய நிலை காரணமாக தற்போது அதிகாரிகள் ஆர். ஸி. ஸி. ரூஃபிங் போடுவதற்கான பரிந்துரையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்கான திருத்த மதிப்பீடு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாயாகிறது. அது தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள்

* வினா எண் 280—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமண்யன்: திரு எம். சின்னசாமி: திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியில் மாணவர் மாணவியர்கள் குலுக்குச்சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில் அந்த முறையை ரத்து செய்ய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியில் மாணவர் மாணவியர் குலுக்குச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்று கடந்த பிப்ரவரி திங்களில் ஆணையிடப் பட்டது. இம்முறையில் குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டதை யொட்டி அரசு இதனை மறுபரிசீலனை செய்து அம்முறையை ரத்து செய்து தேர்வு குழு மூலம் தேர்ந்தெடுக்கும் முறையையே அமுல்படுத்தும்படி நவம்பர் திங்களில் மறு ஆணை வெளியிடப் பட்டுள்ளது.